# யூலை - 21 - வெள்ளி

புனித பிறின்ட்சி லோறன்ஸ்

"பலியை அல்ல, இரக்கத்தையே விரும்புகின்றேன்" (மத்.12:7)

## முதல் வாசகம் : விடுதலைப் பயணம்11: 10 – 12:14

மோசேயும் ஆரோனும் இவ்வருஞ்செயல்கள் அனைத்தையும் பார்வோன்முன் செய்தனர். ஆண்டவர் பார்வோனின் மனம் இறுகிவிடச் செய்ததால், அவன் இஸ்ரயேல் மக்களைத் தன் நாட்டிலிருந்து போகவிடவில்லை!எகிப்து நாட்டில் ஆண்டவர் மோசேக்கும் ஆரோனுக்கும் பின்வருமாறு கூறினார்.. உங்களுக்கு மாதங்களில் தலையாயது இம்மாதமே! ஆண்டில் உங்களுக்கு முதல் மாதமும் இதுவே!இஸ்ரயேல் மக்கள் கூட்டமைப்பு முழுவதற்கும் நீங்கள் அறிவியுங்கள் அவர்கள் இம்மாதம் பத்தாம்நாள், குடும்பத்துக்கு ஓர் ஆடு, வீட்டிற்கு ஓர் ஆடு என்று தேர்ந்தெடுத்துக் கொள்ளட்டும்.ஓர் ஆட்டினை உண்ண ஒரு வீட்டில் போதிய ஆள்கள் இல்லையெனில், உண்போரின் எண்ணிக்கைக்கும் உண்ணும் அளவுக்கும் ஏற்ப அண்டை வீட்டாரைச் சேர்த்துக்கொள்ளட்டும்.ஆடு குறைபாடற்றதாக, கிடாயாக, ஒரு வயது குட்டியாக இருக்க வேண்டும். தேர்ந்தெடுப்பது வெள்ளாடாகவோ செம்மறியாடாகவோ இருக்கலாம்.இம்மாதம் பதினான்காம் நாள்வரை அதை வைத்துப் பேணுங்கள். அந்நாள் மாலை மங்கும் வேளையில் இஸ்ரயேல் மக்கள் கூட்டமைப்பின் அனைத்துச் சபையும் அதை வெட்ட வேண்டும். இரத்தத்தில் சிறிதளவு எடுத்து, உண்ணும் வீடுகளின் இரு கதவு நிலைகளிலும், மேல் சட்டத்திலும் பூச வேண்டும்.இறைச்சியை அந்த இரவிலேயே உண்ணவேண்டும். நெருப்பில் அதனை வாட்டி, புளிப்பற்ற அப்பத்தோடும் கசப்புக் கீரையோடும் உண்ண வேண்டும்.அதைப் பச்சையாகவோ நீரில் வேகவைத்தோ உண்ணாமல், தலைகால்கள், உட்பாகங்கள் முழுவதுமாக நெருப்பில் வாட்டி, அதனை உண்ணுங்கள்.அதில் எதையுமே விடியற்காலைவரை மீதி வைக்கவேண்டாம். காலைவரை எஞ்சியிருப்பதை நெருப்பால் சுட்டெரியுங்கள்.நீங்கள் அதனை உண்ணும் முறையாவது இடையில் கச்சை கட்டி, கால்களில் காலணி அணிந்து, கையில் கோல் பிடித்து விரைவாக உண்ணுங்கள். இது "ஆண்டவரின் பாஸ்கா".ஏனெனில், நான் இன்றிரவிலேயே எகிப்து நாடெங்கும் கடந்து சென்று, எகிப்து நாட்டில் மனிதர் தொடங்கி விலங்குவரை அனைத்து ஆண்பால் தலைப்பிறப்பையும் சாகடிப்பேன். எகிப்தின் தெய்வங்கள் அனைத்தின்மேலும் நான் தீர்ப்பிடுவேன். நானே ஆண்டவர்!இரத்தம் நீங்கள் இருக்கும் வீடுகளில் உங்களுக்கு அடையாளமாக இருக்கும். நான் இரத்தத்தைக் கண்டு உங்களைக் கடந்து செல்வேன். எகிப்து நாட்டில் நான் அவர்களைச் சாகடிக்கும்போது, கொல்லும் கொள்ளை நோய் எதுவும் உங்கள்மேல் வராது.இந்நாள் உங்களுக்கு ஒரு நினைவு நாளாக விளங்கும். இதனை ஆண்டவரின் விழாவாக நீங்கள் தலைமுறை தோறும் கொண்டாடுங்கள். இந்த விழா உங்களுக்கு நிலையான நியமமாக இருப்பதாக!

**பதில்பாடல் :** மீட்பின் கிண்ணத்தைக் கையிலெடுத்து
ஆண்டவர் பெயரைத் தொழதிடுவேன்

## நற்செய்தி : மத்தேயு 12 : 1 – 8

அன்று ஓர் ஓய்வுநாள். இயேசு வயல்வழியே சென்று கொண்டிருந்தார். பசியாயிருந்தால் அவருடைய சீடர் கதிர்களைக் கொய்து தின்னத் தொடங்கினர்.பரிசேயர்கள் இதைப் பார்த்து இயேசுவிடம், "பாரும், ஓய்வு நாளில் செய்யக்கூடாததை உம் சீடர்கள் செய்கிறார்கள்" என்றார்கள்.அவரோ அவர்களிடமும், "தாமும் தம்முடன் இருந்தவர்களும் பசியாய் இருந்தபோது தாவீது என்ன செய்தார் என்பதை நீங்கள் வாசித்தது இல்லையா?இறை இல்லத்திற்குள் சென்று அவரும் அவரோடு இருந்தவர்களும் அர்ப்பண அப்பங்களை உண்டார்கள். குருக்கள் மட்டுமே உண்ணக்கூடிய அப்பங்களை அவர்கள் உண்டது தவறல்லவா?மேலும் ஓய்வு நாள்களில் குருக்கள் கோவிலில் பணியாற்றுவது ஓய்வுநாளை மீறும் குற்றமாகாது என நீங்கள் திருச்சட்டத்தில் வாசித்ததில்லையா?ஆனால் கோவிலைவிடப் பெரியவர் இங்கே இருக்கிறார் என நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்."பலியை அல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன்" என்பதன் கருத்தை நீங்கள் அறிந்திருந்தால் குற்றமற்ற இவர்களைக் கண்டனம் செய்திருக்கமாட்டீர்கள்.ஆம், ஓய்வு நாளும் மானிட மகனுக்குக் கட்டுப்பட்டதே" என்றார்.

**தியானம்:** மனிதர்கள் சட்டங்களை ஆளுவதை விடுத்து சட்டங்களால் மனிதர்கள் ஆளப்படுகின்றார்கள். சமூகம் சமூகமாக வாழ வேண்டும் என்பதற்காகவே சட்டங்களும் நடைமுறைகளும் ஏற்படுத்தப்பட்டன. ஆனால் இன்றோ மனிதன் சட்டங்களுக்கு தன்னை விற்றுப்போட்டு சட்டத்தின் மையமான மனிதாபிமானத்தை இழந்து நிற்கின்றான். எதற்கெடுத்தாலும் சட்டம் பேசி வாக்குவாதம் செய்து இன்று மனித மனங்கள் குழப்பங்களில் சிக்கித் தவிக்கின்றது. இதையே பவுலடியார் "வாழ்வுக்கு வழியாக இருக்கவேண்டிய சட்டம் எனது சாவுக்கு வழியாயிற்று என்று கண்டேன்" (உரோ.7:10) என்று எழுதுகின்றார். மேலும் "திருச்சட்டம் தன்னிலே தூயதுதான். அவ்வாறே கட்டளையும் தூயது, நேரியது, நல்லது. அவ்வாறாயின் நல்லது என் சாவுக்கு காரணமாக மாறிவிட்டதா? ஒருபோதும் இல்லை. எல்லாம் பாவத்தின் வேலைதான். பாவம் தன் இயல்பை வெளிப்படுத்துவதற்காக நல்லதொன்றைக் கொண்டு எனக்கு சாவை விளைவித்தது" (உரோ.7:12-13). நம்முடைய மனச்சான்று தூய்மையாக்கப்படாமல், நம்முடைய இதயம் இறைவனுடைய அன்பால் நிரப்பப்படாமல் எத்தனை சட்டங்களை நாம் பின்பற்றினாலும் நமக்கு உண்மையான மீட்பு, விடுதலை கிடைக்காது. ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துவதே நீங்கள் செலுத்த வேண்டிய ஒரே கடனாய் இருக்கட்டும். பிறரிடத்தில் அன்பு கூர்பவர் திருச்சட்டத்தை நிறைவேற்றுபவர் ஆவார் (உரோ.13:8). கிறிஸ்துவின் பேரன்பே நம்மை ஆட்கொண்டு வழிநடத்தும் போது (2கொரி.5:14) அறிவெல்லாம் கடந்த இறை அமைதி கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள உங்கள் உள்ளத்தையும் மனதையும் பாதுகாக்கும் (பிலி.4:7). தூய ஆவி குடிகொள்ளும் ஆலயங்களான நமது உள்ளம் கிறிஸ்துவின் அன்பால் நிரப்பப்படும்போது உண்மையின் சாட்சிகளாக உலகினில் வலம் வருவோம். நாம் சட்டங்களால் இயக்கப்படுபவர்களாக இல்லாமல் உள்ளிருந்து (கடவுளின் அன்பால்) இயக்கப்படுபவர்களாக மாறுவோம். வெளியிலிருந்து முட்டை உடைக்கப்படும்போது அது உணவாக மாறுகின்றது. ஆனால் அதே முட்டை உள்ளிருந்து உடைக்கப்படும்போது ஜீவனாக (உயிராக) வெளிவருகின்றது. நாம் பிறருக்கு ஜீவனைத் தருவதும் அல்லது அழிந்து போவதும் நமது கரங்களில் இருக்கின்றது.